அதிகபட்சம் ரூ.95/—ம் வசூலிக்கின்றன; 10 நிபந்தனைகளை நிறைவு செய்யும்பட்சத்தில், குறைந்தபட்சம் ரூ.10/—ம், அதிகபட்சம் ரூ.85/—ம் வசூலிக்கின்றன. திரையரங்குகளில் மூன்று திரைகள், உணவு, பொழுதுபோக்கு வசதிகள் இருக்கும்பட்சத்தில், குறைந்தபட்சம் ரூ.10/—ம், அதிகபட்சம் ரூ.120/—ம் வசூலிக்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அம்மா திரையரங்குகள் அமைக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அறிவித்த திட்டங்கள் எதையும் செயல்படுத்தாமல் விட்டதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அத்தனையும் மக்களுடைய பயன்பாட்டுக்கு வந்தே தீரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதியுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு குறித்த அறிவிப்பு எனது ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) இப்பொழுதுதானே வந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இல்லை, இப்பொழுதுதான் வந்து கொடுத்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) காலையில்தானே வந்து

2015 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

கொடுத்திருக்கிறீர்கள். பார்க்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், பார்க்கிறேன். (குறுக்கீடு) பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) பள்ளிக் கல்வியில் தேசிய அளவில் முன்னிலை வகிப்பதற்கான திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறரால் கவர்ந்து கொள்ள இயலாததும், தமக்குக் கிடைத்ததை பிறருக்குக் கொடுப்பதால் அழியாததும், மேலான படை வலிமை உடையவராலும் பறித்துக்கொள்ள முடியாததுமான கல்விச் செல்வத்தை தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பெற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில் கல்விக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில், பின்வரும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)

1. கடந்த நான்கு ஆண்டுகளில் 107 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டதோடு, 182 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 5 அரசு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கப் பள்ளிகள் இல்லை என கண்டறியப்பட்டுள்ள 39 குடியிருப்புப் பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலைப் பள்ளி ஒன்றுக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்வீதம் 15 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் புதிய